**செ. கு. எண்**:435 **நாள்**:06.12.2012

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 6.12.2012

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆயுதப்படை பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. செல்வராஜ் அவர்கள் 23.11.2012 அன்று சுப்பிரமணியபுரம் அருகே, புதுக்கோட்டை – திருச்சிராப்பள்ளி பிரதான சாலையில் ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 24.11.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், உதகமண்டலம் ஆயுதப்படை பிரிவில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. சிவக்குமார் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 25.11.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை, காவல் துறை இயக்குநர் அலுவலகம், “Q” பிரிவு, குற்றப் புலனாய்வுத் துறையில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. திருநாவுக்கரசு அவர்கள் சென்னை, ராஜகீழ்பாக்கத்தில் 28.12.2011 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி 26.11.2012 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

திருச்சிராப்பள்ளி மாநகர போக்குவரத்து புலனாய்வுப் பிரிவு கட்டுப்பாட்டு அறையில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. ரவிச்சந்திரன் அவர்கள் 29.11.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை தாலுகா காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. சபாபதி அவர்கள் 30.11.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் திருப்புவனம் வட்டம், நெல்முடிகரை கிராமம், மருதமரம் என்ற இடம் அருகே சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கிருஷ்ணகிரி மாவட்ட ஆயுதப்படை பிரிவில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. சந்தோஷ்குமார் அவர்கள் 1.12.2012 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் ராயக்கோட்டை மேம்பாலம் அருகே சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், திருநின்றவூர் காவல் நிலையத்தில் முதல் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. ரமேஷ்குமார் அவர்கள் 3.12.2012 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிக்க துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர்கள் திரு. திருநாவுக்கரசு மற்றும் திரு. சபாபதி, சிறப்பு உதவி ஆய்வாளர்கள் திரு. செல்வராஜ் மற்றும் திரு. ரவிச்சந்திரன், தலைமைக் காவலர் திரு. சிவக்குமார், முதல்நிலைக் காவலர் திரு. ரமேஷ்குமார் மற்றும் காவலர் திரு. சந்தோஷ்குமார் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சாலை விபத்துகளில் காலமான உதவி ஆய்வாளர்கள் திரு. திருநாவுக்கரசு திரு. சபாபதி, சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. செல்வராஜ் மற்றும் காவலர் திரு. சந்தோஷ்குமார், மாரடைப்பால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. ரவிச்சந்திரன் மற்றும் முதல்நிலைக் காவலர் திரு. ரமேஷ்குமார், உடல்நலக் குறைவால் காலமான தலைமைக் காவலர் திரு. சிவக்குமார் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழக முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**